# இன்றைய நவீன நாகரீக உலகம் எதை நோக்கி பயணிக்கிறது?

நமது முன்னோர்கள் கூறிய அறிவுரைகளையும் அவர்களது வாழ்க்கை முறைகளையும் மறந்து வாழ்ந்து வருகிறோம். உலக அழிவை நோக்கி பயணிக்கிறோம். இன்றைய நாகரிக உலகில் நம்முடைய வாழ்க்கை முறையையும், கலாச்சாரத்தையும் அதற்கு தகுந்தாற்போல நாம் மாற்றிக் கொண்டுள்ளோம். மாற்றிக் கொண்டும் வருகிறோம். இதுவே இன்றைய நடைமுறையாகும்.

கடவுள் படைத்த இவ்வுலகில் பல உயிர்களும், பல ஜீவராசிகளும் வாழ்ந்து வருகிறது. கடவுள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் படைத்த இவ்வுலகில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை என்பதை நாம் உணரவேண்டும். கடவுள் படைத்த படைப்பில் இயற்கை என்பது மிகவும் மனிதனுக்கு முக்கியமானது. இயற்கையில்லாமல் மனிதன் இல்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

## இயற்கை தன்மைகளான :

**நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மண் போன்றவைகளினாலும் எந்தவிதமான மாற்றங்கள் இல்லை. கடவுள் படைத்த படைப்புகளில் மனித உயிர்கள், விலங்குகள், மரங்கள், தாவரங்கள், மலைகள், புழு, பூச்சிகள் போன்ற பல எண்ணிலடங்காத கடவுளின் படைப்பில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை என்பதை நாம் உணர வேண்டும். ஆனால் மனிதர்களாகிய நாம் அனைவரும் இன்றைய நாகரீக உலகில் வாழ்வதற்கு ஏற்ப தன்னுடைய வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொள்கிறோம். நாகரீக மாற்றத்தை நோக்கி நாம்தான் முன்னேறி போகிறோம் என்பதை நாம் உணர வேண்டும். ஆகையால் அதன் விளைவாக நம்மை நாம் அழித்துக் கொண்டு வருகிறோம்.**

**உணவு பழக்க வழக்கங்கள், ஆரோக்கியம் இல்லாத வாழ்க்கை முறை, ஒழுக்க நெறிமுறைகளின்படி வாழ்வதை கடைப்பிடிக்காது இருத்தல், நோயுற்று மிக விரைவில் மரணம் என்ற அடிப்படையில் நாகரீக உலகில் பயணிக்கிறோம்.**

**நாம் அனைவரும் சிறுகுழந்தையாக வளரும்போது நாம் அனைவரும் நல்ல குழந்தைகளாகவும், ஒழுக்க நெறிமுறைகளின்படி வாழ்ந்தும், வளர்ந்தும் வருகிறோம். நாளடைவில் பெற்றோர்கள் வளர்ப்பிலும், அவர்களின் அறிவுரைகளின் படியும், அவர்களுடைய வாழ்க்கை முறைகளின் படியும், கல்வி படிப்பிற்காக கல்விக்கூடங்கள் செல்லும் இடத்தில் குருமார்களின் போதனைகளின்படியும், அதற்குப் பின் நண்பர்கள், உறவினர்கள் பின்பு தனக்கென்ற சிந்தனைகளின்படியும், தனக்கென்ற அறிவுகளின் படியும் உலக நெறிமுறைகளைப் பார்த்து பழகிக் கற்றுக் கொண்டு அதற்கு தகுந்தாற்போல் தன்னுடைய வாழ்க்கை முறைகளை வாழ்ந்து வருகிறோம். இதுவே உலக நியதியாகும். இன்றைய நாகரீக உலகில் தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும். எந்த விஷயங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். எதைக் கற்றுக் கொள்ளக் கூடாது. எது நமக்கு தேவை , எது நமக்கு தேவையில்லை என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சிந்தனையாகும். ஆகையால் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கும்போது நல்ல கருத்துகளையும் அறிவுரைகளையும், நமது முன்னோர்களின் வாழ்க்கை முறைகளையும் கற்றுக் கொடுத்து வளர்க்க வேண்டும். அது பின்வரும் சந்ததிகளுக்கு பயன்தரும்.**

கடவுள் படைத்த இந்த மனித உயிர் மிகவும் முக்கியமானது. பன்மடங்கு சக்திகளையும், ஆற்றலையும் உடையது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். நாம் வாழும் இவ்வுலகில்தான் பல திறமைகள் படைத்த மருத்துவம், சோதிடம், விஞ்ஞானம், மெய்ஞானம் பல திறமைகள் படைத்த சித்தர்கள் இவ்வுலகில் பிறக்கப்பட்டார்கள். இவ்வுலகில் பிறந்த உயிர்களை காப்பாற்றுவதற்கு ஏற்றவாறும், மனிதனுடைய வாழ்க்கை வாழ்வதற்கான அர்த்தத்தை தெரிந்து கொள்வதற்கான நல்ல பண்புகளையும், நல்ல அறிவுரைகளையும், நல்ல கருத்துகளையும் எழுதியும், பாடியும், பாடல்கள் வழிகளாக விட்டுச் சென்ற நமது முன்னோர்கள் இன்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பதை நம்மால் உணர முடிந்தும், உணர முடியாமலும் வாழ்ந்து வரும் சித்தர்களும், முனிவர்களும், ஞானிகளும், ரிஷிமார்களும், நமது முன்னோர்களும் இந்த மண்ணில்தான் கடவுளால் படைக்கப் பெற்றவர்கள் மற்றும் அறிவியல், விஞ்ஞான மேதைகளும் மற்றும் பல விளையாட்டு வீரர்களும், பல திறமைபடைத்தவர்களும், இவர்கள் அனைவரும் இவ்வுலகில் நம்மைப்போல அழிந்து போகக்கூடிய மனித உடலில் அதாவது (மனித உடல் - உயிர் ஆன்மா) இரண்டும் சேர்ந்ததால்தான் நம்மைப் போன்று மனிதனாக இவ்வுலகில் கடவுளால் படைக்கப் பெற்றவர்கள் என்பதை நாம் முதலில் உணர

வேண்டும். நான் மேலே கூறிய நபர்கள் அனைவரும் போல நமக்கும் பல திறமைகள் இருக்கிறது. அதை நாம் வெளிக்கொண்டு வருவதில்லை. உலக வாழ்க்கையில் மாட்டிக் கொண்டும், நமக்குள் இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவது இல்லை. அவ்வாறு தனக்குள் இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி தன்னையே தேடத் தொடங்கியதின் வெற்றியே அவர்களுடைய சிறப்புகளாகும். நம்முடைய தேடுதல் என்பது நமது முன்னோர்களின் வழிமுறைகளின்படி இருந்தால் நாம் அனைவரும் வெற்றியை நோக்கி பயணிக்கலாம். நம்முடைய வாழ்க்கையிலும் நம்மைச் சுற்றி இருக்கும் எல்லா துறைகளிலும் இவ்வுலகில் வெற்றியை நோக்கி நகரலாம்.

ஆனால் நாம் அனைவரும் இன்றைய அவசர உலகிலும், மாயை உலகிலும் எதை நோக்கி பயணிக்கிறோம்? இன்றைய நவீன நாகரீகம் வளர்ச்சியடைந்த இந்த உலகத்தில் தன்னை அடிமையாக்கி அதிலிருந்து விடுபட முடியாமல், அதற்கு தகுந்தாற்போல வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டு நாம் அழிவை நோக்கி பயணிக்கிறோம். நாம் அனைவரும் ஒன்றை மட்டும் சரியாக மனதில் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால்,

**கடவுள் படைத்த படைப்புகளில் எதுவும் மாறவில்லை.** மனிதனாகிய நாம்தான் நமக்குத் தகுந்தாற்போல் வாழ்க்கை முறைகளையும் மற்றும் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் செயற்கையாக மாற்றிக் கொண்டுள்ளோம். நாம் ஒன்றை நினைவு கூர்ந்து கவனிக்க வேண்டும்.

நமது முன்னோர்கள் ஆயுட்காலம் என்பது 100 வருடங்கள் முதல் 120 வருடங்கள் வரை ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் நம்முடைய ஆயுட்காலம் என்பது 50 வருடம் முதல் 60 வருடங்கள் என்ற மிக விரைவாகவே மரணத்தை நோக்கி பயணிக்கிறோம். நாம் அனைவரும் எதற்காக இவ்வுலகிற்கு வந்தோம் என்றும், எதையும் தெரிந்து கொள்ளாமலே மிக விரைவாக நாம் சென்று விடுகிறோம். ஆகையால் இன்றைய நவீன நாகரீக உலகில் (Technology) என்னும் முறை ஒன்று வளர வளர நம்முடைய ஆயுட்காலம் என்பது குறைந்து கொண்டே வருகிறது என்பதை நாம் நன்கு உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகள், அவர்களுடைய பண்புகள், கலாச்சாரங்கள், அவர்களுடைய அறிவுரைகள், பழமொழிகள், பாடல்கள் இவற்றையெல்லாம் நம்மால் மறந்தும், மறக்கப்பட்டும், அழிந்தும், அழிக்கப்பட்டும் வருகிறது. அவற்றை நாம் மீண்டும் புதுப்பிக்க வேண்டும். நாம் அனைவரும் உலக வாழ்க்கையில் அவர்களுடைய பண்புகளையும் அவர்கள் கூறிய கருத்துகளையும் கடைப்பிடித்து வந்தோம் என்றால் அதன் பலனாக நாம் அனைவரும் உலக ஞானமும், மெய்ஞானமும் கற்றுத் தேர்ந்து அடுத்த நிலையை நோக்கி பயணிக்கலாம்.